**IN THE COURT OF III ADHOC JUDGE**

**City Civil Court Chennai -104**

**OS. NO: 2210/2023**

**PW1: Venkatesan** **DATE:04.06.2026**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சாட்சியானவர் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 1 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக செய்யப்படுகிறார்.

நான் வசந்தா, குணசேகரன், வெங்கடேசன் , சீனிவாசன் மற்றும் முனியம்மாள் ஆகியோர்கள் வாரிசுதாரர்கள் என்று குறிப்பிட்டுள்ளேன். முனியம்மாள் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மற்றொரு வழக்கில் வசந்தா, வெங்கடேசன் வாதியாகவும் குணசேகரன் , சீனிவாசன் பிரதிவாதியாகவும் காட்டியுள்ளேன் என்றால் சரிதான்.என்னுடைய சகோதரி வசந்தா இறந்தபிறகு அவருடைய வாரிசுதாரர்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் முதலில் தாக்கல் செய்துள்ள வாதுரையில் 2 பாகங்கள் கேட்டுள்ளேன். எனக்கு ஒரு பாகமும் என்னுடைய சகோதரிக்கு 1 பாகமும் கேட்டுள்ளேன். நான் பிராதை திருத்தம் செய்தபிறகு எனக்கு 3 ல் 1 பங்கு பாகம் கிடைக்கவேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கில் சரவர பரிகாரம் கேட்காததாலும் உரிய தரப்பினர்களை சேர்க்காததாலும் என்னுடைய பிராது நிலைக்கத்தக்கது அல்ல என்னும் வழக்கு தள்ளுபடிக்கு லாயக்கானது என்று சொன்னால் சரியல்ல. நான்

வழக்குடன் வில்லங்கச்சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் ஏற்கனவே பல பரிவர்த்தனைகள் தாவா சொத்தில் செய்துள்ளதால் அதை மறைப்பதற்காக வில்லங்க்சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் கதவு எண் 20, பூமகள் தெரு, ஈக்காட்டுத்தாக்கலில் தற்போது குடியிருக்கிறேன். இந்த வீட்டிலிருந்து குணசேகரன் என்னை காலிசெய்யக் கூறினார் என்றால் சரியல்ல. நான் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்த பிறகு குணசேகரன் என்னை காலி செய்யும்படி கேட்டார் என்றும் நான் அவரை மிரட்டி பணம் பறிப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்த பிறகு எனக்கு தாவா சொத்தில் எந்த உரிமையும் இல்லை என்றும் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.